"தமிழ் அழிந்திட்டால் தமிழர் அழிவார்
நந்தமிழ் காப்பது நம் கடன் அன்றோ!"

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

(அங்கீகரிக்கப் பெற்ற தர்ம தாபனம்)

# 27 ஆம் ஆண்டறிக்கை

"செல்வர்க்கழகு தம் சமூகத்தைத் தாங்குதல்"

சங்கப் பணி மனை
தொலைபேசி — 83759.

இல, 7, 57 ஆம் ஒழுங்கை,
உருத்திரா வீதி,
கொழும்பு - 6.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்
## ஆட்சிக்குழு உறுப்பினர், 1969.

காப்பாளர்:— திரு. இரா. சபாநாயகம்

துணைக்காப்பாளர்:— திரு. க. ச. அருணந்தி

பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம்
திரு. யோன் செல்லப்பா
திரு. செ. இரங்கநாதன், கியூ. சி.
திரு. வே. க. கந்தசாமி
திரு. செ. நடராசா
திரு. சோ. நடேசன், கியூ. சி.
கலாநிதி. த. நல்லைநாதன்
திரு. பி. நவரத்தினராசா, கியூ. சி.
திரு. கே. சி. தங்கராசா
திரு. வீ. சிவசுப்பிரமணியம், நீதியரசர்.
திரு. பீ. ஆர் சாமுவேல்
திரு. சௌ. தொண்டைமான், பா. உ.
திரு. யே. ஆர். சின்னத்தம்பி
திரு. யே. ம. இராசரத்தினம்

தலைவர்: திரு. வ. அருளம்பலம்

துணைத்தலைவர்:— திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை

திரு. மு. வைரவப்பிள்ளை
திரு. இ. பொ. செல்லையா
திரு. கா. பொ. இரத்தினம், பா. உ.
திரு. கா. கா. இரத்தினம்
திரு. கா. ஆ. தவத்துரை
திரு. வே. கணபதிப்பிள்ளை
திரு. சி. ஆ. கந்தையா
திரு. சோ. நடராசா
திரு. இ. நமசிவாயம்
திரு. யேம்ஸ். தே. இரத்தினம்
திரு. க. செ. நடராசா
ஜனாப். எஸ். எம். கமால்தீன்
திரு. க. நாகலிங்கம்
திரு இ. பாஸ்கரலிங்கம்
திரு. இ. சி. சோதிநாதன்

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்
## 27ஆம் ஆண்டுப் பொதுக் கூட்டம் (27.12.69)

திருவள்ளுவராண்டு 2000, மார்கழி, 15 (29. 12. 68) தொடக்கம் 2001, மார்கழி 12 (27. 12. 69) வரையுள்ள காலம்.

ஆட்சி குழுக் கூட்டம்:

29. 12. 68 தொடக்கம் 27. 12. 69 வரையுள்ள இக்காலத்தில் 9 ஆட்சிக்குழுக் கூட்டங்கள் நடைபெற்றன.

உறுப்பினர் நிலை:

| | | |
|---|---|---|
| இவ்வாண்டு சேர்க்கப்பட்ட ஆயுள் உறுப்பினரின் எண்ணிக்கை | – | 3. |
| சாதாரண உறுப்பினரின் எண்ணிக்கை | – | 12. |
| இப்பொழுதுள்ள ஆயுட்கால உறுப்பினரின் எண்ணிக்கை | – | 83. |
| சாதாரண உறுப்பினரின் எண்ணிக்கை | – | 215. |

விழாக்கள், பொதுக் கூட்டம் முதலியன:

(1) சென்ற ஏப்பிறில் மாதம் தமிழகத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்த சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானக்கிராமணியார் அவர்களை எமது சங்க ஆதரவில் கொழும்பிற் சொற்பொழிவு நிகழ்த்துமாறு அழைத்த பொழுது அவர் மனமுவந்து எமது அழைப்பை ஏற்று 15. 4. 69 மாலை 6 மணிதொடக்கம் பம்பலப்பிட்டி, சரசுவதி மண்டபத்தில் "தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்க்கை நெறி" என்னும் பொருள்பற்றி எமது சங்க ஆதரவில் ஓர் அரிய விரிவுரை ஆற்றினார்கள். சங்கத் துணைத்தலைவர் திரு மு. வயிரவப்பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார்கள். ம. பொ. சி. அவர்களுக்கும் அவர் எமது சங்க ஆதரவிற் பேச ஒழுங்கு செய்வதற்கு உதவிபுரிந்த தமிழரசுக் கட்சியினருக்கும் சங்கம் தன் உளம்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

(2) திருச்சிராப்பள்ளி, ஜமால் முகம்மது கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் சி. நயினார் முகம்மது, எம். ஏ, அவர்கள் ஈழநாட்டிற் சுற்றுலாவுக்காக வந்தபொழுது எமது சங்க அழைப்பை அன்புடன் ஏற்று "தமிழ் இலக்கியச் செல்வம்"

எனும் பொருள்பற்றி, 6. 5. 69 அன்று பி. ப. 6 மணிக்கு பமபலப் பிட்டி, சரசுவதி மண்டபத்தில் எமது சங்க ஆதரவில் ஓர் அரிய ஆராய்ச்சிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். கூட்டத்திற்கு ஜனாப் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள் தலைமை தாங்கினார்கள். பேராசிரியர் நயினார் முகம்மது அவர்களுக்கு எமது சங்கம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

நாவலர் சிலை வழியனுப்பு விழா:

(3) நாவலர் சபையினர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர் களுக்கு எடுத்த சிலை ஊர்வலம் 24. 6. 69 அன்று கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்திலிருந்து புறப்பட்டபொழுதும் பம்பலப்பிட்டி, இந்துக் கனிட்ட பாடசாலை முன்றிலில் பொது அஞ்சலிக்காக வைக்கப்பட்டபொழுதும் எமது சங்க உறுப்பினர் பலர் கலந்துகொண்டனர். சங்கத் தலைவர் திரு. வ. அருளம்பலம் தலைமையிற் இந்துக் கனிட்ட பாடசாலைக்குச் சென்ற சங்கக் குழு சிலைக்கு மலர்மாலை சூட்டி அஞ்சலி செலுத்திற்று.

யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் விசேட பந்தர் அமைத்து 27. 6. 69 தொடக்கம் 29. 6. 69 வரை நடத்தப்பட்ட நாவலர்விழாவில் சங்கச்சார்பில் சங்கப் பொதுச் செயலாளரும் வேறு சில உறுப்பினரும் கலந்து கொண்டனர்.

(4) தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் மாண்பு மிகு புலவ கா. கோவிந்தன் அவர்கள் திருக்கோணமலை நகராட்சிமன்றத் தலைவர் திரு. எஸ் சிவானந்கன் அவர்களின் அழைப்பை ஏற்று திருவள்ளுவர் 2000 ஆண்டு விழாவிற் சிறப்புச் சொற்பொழி வாற்ற வந்த பொழுது எமது சங்கம் பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் அன்னாருக்கு ஒரு பொது வரவேற்பளித்தது. அவ்வைபவத்திற்கு நீதியரசர் மாண்புமிகு வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமை தாங்கினார். செல்வி அருந்ததி சிவசுப்பிர மணியத்தின் தமிழ்த்தாய் வணக்கத்துடன் தொடங்கிய கூட்டத்தில் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. வ. அருளம்பலம் இலங்கைப் பாராளுமன்றப் பிரதிச் சபாநாயகர் திரு. மு. செ சிதம்பரம் பா. உ., தமிழ் மறைக்கழகத் தலைவர் பண்டிதர் க. பொ. இரத்தினம் பா. உ., திரு வ. அன்னுமலை, பா. உ., திரு எஸ். சிவானந்தன் திருக்கோணமலை நகராட்சிமன்றத் தலைவர் ஆகியோர் புலவர் கோவிந்தன் அவர்களுக்குப் பாராட்டுரை வழங்கினர். ஈழ நாட்டுத் தமிழ் மக்கள் சார்பில் தமக்களிக்கப் பட்ட பொது வரவேற்புக்கும் பாராட்டுரைகளுக்கும் நன்றி



தெரிவித்த புலவர் கோவிந்தன் திருவள்ளுவர் பற்றி அரியதோர் சொற்பெருக்காற்றினர். சங்கப் பொதுச் செயலாளர் திரு ச. சரவணமுத்து நன்றியுரை கூறினர்.

ஆராய்ச்சிச் சொற்பொழிவு:

(5) தமிழ் நாட்டைச் சேர்ந்தவரும் முன்னர் ஈழத்திற் பல் லாண்டு வாழ்ந்தவரும் பல ஆராய்ச்சி நூல்களின் ஆசிரியரு மான நுண்கலைச் செல்வர் அ. இராகவன் அவர்கள் 9. 9. 69 பி. ப. 6 மணியளவில் வெள்ளவத்தை, சைவமங்கையர் வித்தியாலய மண்டபத்தில் "தமிழர் பண்பாடு" எனும் பொருள்பற்றி ஓர் அரிய ஆராய்ச்சிச் சொற்பொழிவு சங்க ஆதரவில் நிகழ்த்தினர்கள். சங்கத்துணைத் தலைவர் திரு. மு. வயிரவப்பிள்ளை தலைமை வகித்தார். சங்கத்தின் இலக்கியக் குழுச் செயலாளர் திரு. இ. இரத்தினம் நன்றி தெரிவித்துப் பேசினர்கள். திரு இராகவன் அவர்கள் எம் சங்க ஆதரவிற் பேசுவதற்கு உதவி யளித்த இராகவன் வரவேற்புக் குழுவினர்க்குச் சங்கம் தன் நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

காந்தி நூற்றாண்டுவிழா:

(6) காந்தி சேவா சங்கத்தினரால் காந்தி நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளிற் பங்குகொண்டு சிறப்புச் சொற்பெருக்காற்றவென விசேடமாக அழைக்கப்பட்ட தவத்திரு குன்றக்குடி அடிகளார் 26. 9. 69 மாலை 6. 30 மணியளவில் பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் சங்க ஆதரவில், "சர்வோதயம்" எனும் பொருள் பற்றி மிக்க கருத்துப் பொதிந்த ஒரு சொற்பொழிவாற்றினர். அடிகளார் பேசுவதற்கு முன் காந்தி சேவா சங்கச் செயலாளர் திரு. சி. க. வேலாயுதபிள்ளை அவர்கள் காந்திசேவா சங்கம் ஆற்றிவரும் பணிகள் பற்றிச் சபையினர்க்கு எடுத்துரைத்து அச்சங்கத்திற்கு ஆதரவு நல்குமாறு வேண்டிக்கொண்டார். கூட்டத்திற்குச் சங்கத் தலைவர் திரு. வ. அருளம்பலம் தலைமை வகித்தார். சங்கப் பொதுச் செயலாளர் திரு. ச. சரவணமுத்து தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கும் கூட்டத்தை ஒழுங்கு செய்ய உதவிய காந்தி சேவாசங்கத்திற்கும் நன்றி தெரிவித்தார்.

விபுலானந்தர் சிலை வழியனுப்பு விழா:

(7) "யாழ் நூல்" வித்தகர் விபுலானந்த அடிகளாரின் முத்தமிழ், சமய, கல்வித் தொண்டை மறவாத தமிழ் அன்பர் கள் அடிகளாருக்கு நினைவுச் சின்னம் அமைக்குமுகமாக அன்னாரின் திருவுருவச்சிலையை வடித்து அவர் பிறப்பிடமாகிய

கிழக்கு மாகாணம் காரைதீவுக்கு ஊர்வலமாக கொண்டு சென்று நாட்டுவதற்குமுன் வெள்ளவத்தை, இராமகிருஷ்ண மண்டபத்தில் பொது அஞ்சலிக்காக 3. 10. 69 அன்று வைத்திருந்த காலை கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவரின் தலைமையிற் சென்ற சங்கக் குழு சிலைக்கு மலர் மாலை அணிந்து சங்கத்தின் சார்பில் அஞ்சலி செலுத்தியது.

பாராட்டு:

(8) இலங்கை அரசாங்கத்தின் சாகித்திய மண்டலம் எனப்படும் இலக்கிய மன்றம் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை நாவலர் பாடசாலைத் தலைமை ஆசிரியராயிருந்து சிறந்த தமிழ்த் தொண்டு புரிந்துவந்த வித்துவான் ந. சுப்பையாபிள்ளை அவர்களுக்கு "மன்றச் சான்றோன்" என்ற கௌரவப்பட்டம் வழங்கிக் கௌரவித்தமையைப் பாராட்டு முகமாக கொழும்புத் தமிழ்ச் சங்கம் 10. 10. 69 அன்று மாலை பம்பலப்பிட்டி, கிறீன்லன்ஸ் விடுதியகத்தில் ஒரு சிற்றுண்டி விருந்தளித்தது. அப்பொழுது சங்கத் தலைவர் திரு. வ. அருளம்பலம் தலைமை வகித்தார். சங்கத்துணைத் தலைவர்கள் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை, திரு மு. வயிரவப்பிள்ளை, திரு. சோ. நடராசா ஆகியோரும் சங்க இலக்கியக் குழுச் செயலாளர் திரு. இ. இரத்தினமும் வித்துவான் சுப்பையாபிள்ளையின் தமிழ்ப் புலமை, ஆராய்ச்சித்திறன், தமிழ் இலக்கியத்தொண்டு ஆகியனபற்றிப் பாராட்டி அன்னாருக்குப் பல்லாண்டு கூறினர். சங்கப் பொதுச் செயலாளர் நன்றி தெரிவித்தார்.

நூல்நிலையமும் படிப்பகமும்

நூல்நிலைய வளர்ச்சிக்காக இந்த ஆண்டிலும் சங்கம் சில பணிகளைப் புரிந்திருக்கின்றது. 350 ரூபாவுக்கு நூல்நிலையத்திற்கு நூல்கள் வாங்கப்பெற்றன. நூல்நிலையத்திலிருந்த பழைய நூல்கள் சில திருத்திக்கப்படப்பெற்றன.

பேராசிரியர் திரு. ச. கணபதிப்பிள்ளை அவர்களது குடும்பத்தினர் பேராசிரியரது 8 நூல்களையும், பேராதனைப் பல்கலைக் கழகவிரிவுரையாளர் திரு. ஆ. கந்தையா அவர்கள் தாம் எழுதிய "திருக்கேதீசுரம்" என்னும் நூலையும், இச்சங்கத்தின் துணைத் தலைவர்களுள் ஒருவராகிய திரு. சி. ஆ கந்தையா அவர்கள் தாம்பதிப்பித்ததும், காலஞ்சென்ற தமது தந்தையார் இயற்றியதுமான 'கதிரைமலைப் பதிகம், கதிர்காமமாலை' என்ற நூலையும் திரு. இ அம்பிகைபாகன் தான் ஆக்கிய "அம்பிப்பால்" என்ற நூலையும் அன்பளிப்பாக உதவினர்.



பிரித்தானிய, அமெரிக்க, இரசிய இந்திய தூதுவரகங்கள் தமது சஞ்சிகைகளை சங்கத்திற்குத்தொடர்ந்து அனுப்பி வருகின்றன. இந்த ஆண்டில் சங்கத்தின் வேண்டுதலுக்கிணங்கி மேற்கு யேர்மனி, யப்பான் ஆகிய நாட்டுத் தூதுவரகங்களும் தமது வெளியீடுகளை அனுப்பி வருகின்றன. இவர்கள் யாவருக்கும் சங்கம் நன்றி தெரிவிக்கின்றது.

நூல்நிலையத்தைப் பயன்படுத்துவோர் தொகை முந்திய ஆண்டிலும் கூடியிருப்பிலும் இத்தொகை மிகக் குறைவாகவே காணப்படுகிறது. பல அறிஞர்களுக்கும் கல்வி ஆர்வம் உள்ளவர்களுக்கும் நூல்நிலையம் உதவி வருகிறது. நூல்நிலையத்தையும் நூல்நிலையப் பயன்பாட்டையும் விரிவாக்கல் இப்போதைய கட்டட நிலையில் இயலாததாகும். பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் சங்க உறுப்பினர் வாசிப்பதற்கு வைக்கக்கூடிய ஒரு வாசகசாலை ஒழுங்கு செய்ய முடியாமலிருப்பது குறிப்பிடத்தக்கது. சங்கத்தின் புதிய கட்டிடம் அமைந்ததும் நூல்நிலையம் நிறைவு நிலையை அடையும் என எதிர்பார்க்கலாம்.

தமிழ் வகுப்புக்கள்:

புலவர் சிவங் கருணாலய பாண்டியனார் அவர்கள் தொடர்ந்து தமிழ் இலக்கண இலக்கிய வகுப்புக்களை நடத்தி வருகிறார்கள். இப்பொழுது வகுப்புக்கள் கிழமையில் ஒரு நாள் மாத்திரம் (நோன்மதி நாளிலிருந்து மூன்றாம் நாள்) நடைபெறுகின்றன. தொல்காப்பியம், சிவஞானபாடியம் முதலிய நூல்கள் படிப்பிக்கப்படும் இவ்வகுப்புக்களில் பள்ளிப்பராயத்தைத் தாண்டிய சிலர் மாத்திரம் பாடம்கேட்டு வருகின்றனர். தமிழ் இலக்கண இலக்கியங்களில் மிகச்சிறந்த அறிவுபெற்றுள்ள இப்பேரறிஞரிடம் பாடம் கேட்டல் கிடைத்தற்கரிய ஒரு பெரும் பேறாகும் எனினும் இவ்வகுப்புக்களிற் சேர்ந்து படிப்போர் தொகை மிகக் குறைவாகவேயுள்ளது.

தமிழ் மூல விஞ்ஞானபாட வகுப்புக்கள்:

1969 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திலும் திசம்பர் மாதத்திலும் நடைபெற்ற கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண நிலை), திசம்பர் மாதத்தில் நடைபெற்ற கல்விப் பொதுச் சான்றிதழ் (உயர்நிலை) ஆகிய தேர்வுகளுக்குரிய தமிழ் மூல விஞ்ஞான பாடங்களிலும், தமிழ், சமயம், ஆங்கிலம் ஆகிய சாதாரண நிலைப் பாடங்களிலும் மீட்டல் வகுப்புக்கள் சங்கப்பணிமனையில்

நடைபெற்றுவந்தன. இவ்வகுப்புக்களுக்கு முன்னரிலும் பார்க்கக் கூடிய தொகையான மாணவர் வந்தமையினுல் மேலதிக இடவசதிகள் செய்யப்பட்டன.

ஈழத்தமிழர் வரலாறு:

ஈழத் தமிழர் வரலாறு எழுதப்பட வேண்டுமெனச் சில காலத்திற்குமுன் சங்கம் தீர்மானித்து அதற்கென ஓர் உப குழுவை நியமித்தபோதும் இதுவரை அவ்விடயமாக எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

தமிழ் மொழி உரிமைக்கான நடவடிக்கைகள்:

அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்கள் ஆகியன தமிழ் மொழியைப் புறக்கணிக்கும் சம்பவங்கள் சங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோதெல்லாம் சங்கம் சம்பந்தப்பட்ட தாபனங்களுடனும் தொடர்பான அமைச்சருடனும் தொடர்புகொண்டு ஏற்ற நடவடிக்கையெடுத்து வந்திருக்கிறது அரசாங்கத்தின் பண்பாட்டுத் திணைக்களத்திலாயினும் சாகித்திய மண்டலம் எனப்படும் இலக்கிய மன்ற அலுவலகத்திலாயினும் தமிழ்மொழி சம்பந்தமான விடயங்களைக் கவனிக்கக் கூடிய தமிழ் உத்தியோகத்தர் ஒருவராயினும் இல்லாமை பற்றி அத்திணைக்களகத்துடனும் கல்வி அமைச்சருடனும் எடுத்த நடவடிக்கைகளினுல் இதுவரை எவ்வித பயனுமேற்படவில்லை

தமிழ்ப் பிரதேசங்களுக்காய பல்கலைக் கழகம்:

முழு நிறைவான பல்கலைக் கழகமொன்றைத் தமிழ்ப் பிரதேசங்களின் தேவைக்கென நிறுவவேண்டுமென்ற கோரிக்கைக்குச் சங்கம் ஆதரவளித்துத் தேசிய உயர் கல்விச் சபைக்கு விஞ்ஞாபனமொன்றை அனுப்பியுள்ளது. விரைவில் அக்கல்விச் சபை முன்சென்று நேரடியாகப் பேசுவதற்கும் நடவடிக்கையெடுக்கப்படுகிறது.

சங்கப் பணிமனை:

பணிமனையில் இடவசதி போதாமையால் இவ்வாண்டு மேலும் தாழ்வாரம் போன்ற ஒரு நீண்ட தற்காலிக அறை பணிமனைக்கு முன்புறமாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த அறையில் 150 பேர் வரையில் அமரக்கூடிய வசதிகளுண்டு. சிறு கூட்டங்களை இந்த அறையில் நடத்தலாம்.



மண்டபமும் பிறகட்டடங்களும் அமைக்கச் சென்ற ஆண்டில் எடுக்கப்பட்ட முயற்சி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறதாயினும் முன்னேற்றம் ஏற்படவில்லை. கட்டடக்கலைஞர் திரு. வீ. எஸ். துரைராசா அவர்கள் பெரும் சிரத்தையெடுத்து அழகாகத் தயாரித்த திட்டப்படம் கொழும்பு மாநகர சபையினுல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கட்டடத்தின் முற்பகுதியில் வரவிருக்கும் மூன்று மாடிகளில் தளத்தையும் முதல் மாடியையும் முதலில் கட்டவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டு அதற்காகிய திரட்டும் வேலையிற் கவனம் செலுத்தப்படுகிறது இக்கட்டட அமைப்புப் பணியில் சங்க உறுப்பினர், தமிழ் அபிமானிகள் ஆகிய யாவரதும் ஒத்துழைப்பும் உதவியும் பெரிதும் தேவையாகும்

சங்க பணிமனையிருக்கும் 57 ஆம் ஒழுங்கையை அகலமான தாக்குவதற்காக எடுக்கப்பட்ட முயற்சி இன்னும் கைகூடவில்லை. இந்த வேலையைச் செய்து முடிக்குமாறு தொடர்ந்து மாநகர சபையைச் சங்கம் கேட்டுவருகிறது.

நன்றி:

இவ்வாண்டு சங்கம் மேற்கொண்ட பணிகளைச் செவ்விதிற் செய்துமுடிப்பதற்குப் பல்லாற்ருலும் உறுதுணையும் ஒத்தாசையும் அளித்த சங்க உறுப்பினர்க்கும், சங்கத்தின் முயற்சிகளில் நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் கலந்து பணிபுரிந்த ஏனைய அன்பர்க்கும், சங்க விழாக்களையும் கூட்டங்களையும் நடத்துவதற்குச் சரசுவதி மண்டபத்தைத் தந்துதவிய இந்துக் கல்விச் சபையினர்க்கும், சைவமங்கையர் கழகத்தினர்க்கும், சிறந்தமுறையில் இலக்கண, இலக்கிய வகுப்புக்களை நடத்திவரும் புலவர் சிவங்கருணலய பாண்டியனுர் அவர்களுக்கும், தமிழ்மூல விஞ்ஞான பாட மீட்டல் வகுப்புக்களையும் ஆங்கில, தமிழ் வகுப்புக்களையும் திறம்பட நடத்திய ஆசிரியர்க்கும், சங்கத்தின் அறிவிப்புகள் கூட்டங்கள், விழாக்கள் ஆகியனபற்றிய செய்திகளைத் தம் செய்தி இதழ்களில் வெளியிட்டுச் சங்கத்திற்கு ஊக்கமளித்த செய்தி இதழ் ஆசிரியர்களுக்கும் சங்க ஆட்சிக்குழு தன் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

வாழிய, தமிழ் மொழி, வாழிய, தமிழினம்

சங்கப் பணிமனை,
7, 57 ஆம் ஒழுங்கை,
உருத்திரா வீதி,
கொழும்பு-6,
17. 12. 1969.

ச. சரவணமுத்து,
கௌரவ பொதுச் செயலாளர்,
ஆட்சிக் குழுவுக்காக.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம் (வரையறுத்தது) வெள்ளவத்தை

## 1968 திசம்பர் 31ம் தேதியுடன் முடிவடையும் ஆண்டுக்குரிய வரவு செலவுக் கணக்கு.

**செலவு**

| | |
|---|---|
| செய்தித் தாள்கள் | 62.05 |
| மின்சாரம் | 242.10 |
| அச்சுக்கூலி, கடுதாசி முதலியன | 304.35 |
| போக்கு வரவு தட்டெழுத்துச் செலவு | 127.70 |
| மாநகரசபை வரி | 328.90 |
| அத்தாட்சிப்படுத்திய மாதிரிப் படங்கள் | 131.00 |
| கணக்கியற் செலவு | 50.00 |
| தொலைபேசி, தபாற் செலவுகள் | 401.35 |
| விழாக்களும் கூட்டங்களும் | 1,679.80 |
| பத்திரிகை விளம்பரம் | 22.00 |
| காணி துப்பரவுசெய்த செலவு | 173.95 |
| சாந்தா சேகரிப்பாளர் கழிவு | 104.89 |
| செலவு போக எஞ்சிய வருமானம் | 11,322.00 |
| | 14,950.09 |

**வரவு**

| | | |
|---|---|---|
| உறுப்பினர் சாந்தாப் பணம் | 381–25 | |
| சீவியகால உறுப்பினர் | 1,000–00 | 1,381.25 |
| நன்கொடைகள்-கட்டட நிதி | | 11,423.45 |
| நன்கொடைகள்-பொது | | 1,920.00 |
| பலவித வருமானம் | | 44.25 |
| இலங்கை வங்கி சேமிப்பு வட்டி | | 177.30 |
| அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வட்டி | | 3.84 |
| | | 14,950.09 |

## 1968, திசம்பர். 31ல் உள்ளபடியான ஐந்தொகைக் கணக்கு.

**பொறுப்பு**

| | | |
|---|---|---|
| **மூலதனக் கணக்கு** | | |
| சென்ற ஆண்டு ஐந்தொகைக் கணக்குபடி | 44,306.49 | |
| கூட்டி: நடப்பு ஆண்டு செலவு | | |
| போக எஞ்சிய வருமானம் 11,322.00 | | 55,628.49 |
| **நூல்நிலைய வைப்புப் பணம்** | | |
| சென்ற ஆண்டு ஐந்தொகைக் கணக்குப்படி | 65.00 | |
| கூட்டி: நடப்பு ஆண்டு வைப்புகள் | 15.00 | 80.00 |
| | | 55,708.49 |

**இருப்பு**

| | | |
|---|---|---|
| **காணியும் கட்டடங்களும்** | | |
| சென்ற ஆண்டு ஐந்தொகைக் கணக்கின்படி | 28,771.50 | |
| கூட்டி: நடப்பு ஆண்டு செவுகள் | 1,078.63 | 29,850.13 |
| **தளபாடம் முதலியன** | | |
| சென்ற ஆண்டு ஐந்தொகைக் கணக்கின்படி | 3,456.49 | |
| நடப்பு ஆண்டு கொள்வனவு | 539.31 | 3,995.80 |
| **காற்றுடி** | | |
| சென்ற ஆண்டு ஐந்தொகைக் கணக்கின்படி | | 500.00 |
| **புத்தகங்கள்** | | |
| சென்ற ஆண்டு ஐந்தொகைக் கணக்கின்படி | 1,234.86 | |
| நடப்பு ஆண்டுக் கொள்வனவு | 340.31 | 1,575.17 |
| **மலர்** | | |
| சென்ற ஆண்டு ஐந்தொகைக் கணக்கின்படி | | 246.70 |
| **வைப்புப் பணம்** | | |
| மின்சாரம்-சென்ற ஆண்டு ஐந்தொகைக் கணக்கின்படி | | 100.00 |
| **சில்லறைக் கடன்கள்** | | |
| சென்ற ஆண்டு ஐந்தொகைக் கணக்கின்படி | | 197.85 |
| **காசு** | | |
| இலங்கை வங்கி சேமிப்புக் கணக்கில் | 5,968.18 | |
| இலங்கை வங்கி நடப்புக் கணக்கில் | 9,653.34 | |
| அஞ்சல் அலுவலக சேமிப்புக் கணக்கில் | 170.77 | |
| கையிருப்பு | 3,450.55 | 19,242.84 |
| | | 55,708.49 |

எமது இன்றைய தேதிய அறிக்கைக்கு அமைவாகச் சரியென உறுதிப் படுத்துகிறோம்.

கொழும்பு, ஜீ இராசதுரை (ஒப்பம்)
1969, திசம்பர் 17ம் தேதி. சாட்டேட் கணக்காளர்.

மேற் கூறிய கணக்கு விபரம் சரியென உறுதிப்படுத்துகிறேன்.

வை. பொன்னுச்சாமி (ஒப்பம்)
கௌரவ பொருளாளர்.

| | |
|---|---|
| பொதுச் செயலாளர்: | திரு. ச. சரவணமுத்து |
| துணைச் செயலாளர்: | திரு. க. குமாரசிங்கம் |
| பொருளாளர்: | திரு. வை. பொன்னுச்சாமி |
| உதவிப் பொருளாளர்: | திரு. தி. சி. கணேசலிங்கம் |
| உறுப்புரிமைச் செயலாளர்: | திரு. த. சுப்பிரமணியம் |
| இல்லச் செயலாளர்: | திரு. சு. க. ச. பொன்னுத்துரை |
| நூல்நிலையப்பொறுப்பாளர்: | திரு. க. கந்தசுவாமி |
| இலக்கியக்குழுச்செயலாளர் | திரு. இ இரத்தினம் |
| கட்டிடக்குழுச்செயலாளர்: | திரு. த. நடேசுவரன் |
| ஈழத்தமிழர்வரலாற்றுக் குழுச் செயலாளர்: | திரு. கு. பூரணனந்தா |

ஆட்சிக்குழு உறுப்பினர்:

திரு ச. இ. அப்புத்துரை
திரு. பெ. கணபதிப்பிள்ளை
திரு. செ. வேலாயுதபிள்ளை
திரு. வே. வல்லிபுரம்
திரு. த, கனகரத்தினம்
திரு. வே. இராசமாணிக்கம்
திரு மா. க கனகேந்திரன்
திரு. க. சி. குலரத்தினம்
திரு. கி- இலக்ஷ்மணன்
திரு. ஐ. குமாரசுவாமி
திரு. பெ. கணநாதபிள்ளை
திரு. வ. நடராசா
திரு. செ. நடராசா
திரு. சி. பாலச்சந்திரன்
திரு நா. சுப்பிரமணியம்
திரு. அ. வி. மயில்வாகனம்
திரு. வி. ம. தியாகராசா
திருமதி. மகேஸ்வரி பாலகிருஷ்ணன்
திருமதி. தருமவதி திருநாவுக்கரசு
திரு மு. க. நடராசா
திரு. க. சச்சிதானந்தன்
திரு. இ. அம்பிகைபாகன்

கௌரவ கணக்காய்வாளர்:

திரு வே. தம்பு
திரு. சி. பாலசுந்தரம்

பிரசித்த கணக்காய்வாளர்:

திரு. ஜீ. இராசதுரை

இராசா அச்சகம்
வெள்ளவத்தை.